**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 153/2022

நாள்: 04.11.2024

பெயர்: சின்னப்பிள்ளை (வா.சா.1) க/பெ: சின்னையன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...</u>**

1) நான் வெண்மான்கொண்டான் கிராமத்தில் சுமார் 40 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். தாவா சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா 1வது இன சொத்துக்கள் என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா 1வது இன சொத்திற்கு நான்கெல்லை விபரம் எனக்கு தெரியாது. பூர்வீக சொத்து என்றால் என்னவென்று எனக்கு தெரியாது. தாவா 1வது அயிட்ட சொத்து பூர்வீகமான சொத்து என்பதற்கு வா.சா.ஆ.2 யை தவிர வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2யை நான் எப்போது வாங்கினேன் என்று எனக்கு தெரியாது.

2) தாவா 1வது இன சொத்து பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. தாவா 1வது இன சொத்து முத்துசாமி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா 1வது இன சொத்து முத்துசாமிக்கு தான் பாத்தியம் என்பதை காண்பிப்பதற்கு அனைத்து ரெவென்யூ ஆதரவுகளும் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி முத்துசாமி தாவா 1வது இன சொத்தை 1ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக கிரையம் கொடுத்து அதனடிப்படையில் 2011 ஆம் ஆண்டு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 1வது இன சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா 1வது இன சொத்தைப் பொறுத்து நான் கேட்கும் பாக பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2

மோசடியாக பெறப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி குடியிருந்து வரும் தாவா 2ம் அயிட்ட சொத்தானது நத்தம் வகைப்பாட்டைச் சார்ந்தது என்றால் சரிதான். தர்மன் என்பவர் யார் என்றால் என்னுடைய சித்தப்பா ஆவார். தர்மன் சொத்திலும், 1ம் பிரதிவாதி ராமலிங்கம் சொத்திலும் யார் குடியிருக்கிறார்கள் என்றால் தர்மன் சொத்தில் 2ம் பிரதிவாதியும், ராமலிங்கம் சொத்தில் ராமலிங்கம் குடியிருக்கிறார்கள். நத்தம் வகைப்பாட்டு சொத்தில் யார் குடியிருக்கிறார்களோ அவர்கள் பெயரில் நத்தம் பட்டா வழங்குவார்கள். அதன் அடிப்படையில் எனது சித்தப்பா தர்மன் பெயரிலும், 1ம் பிரதிவாதி ராமலிங்கம் பெயரிலும் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) தாவா 2வது அயிட்ட சொத்தை 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அவர் பெயரில் தாவா 2வது அயிட்ட சொத்திற்கு பட்டா ஏற்பட்டதன் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. 2ம் அயிட்ட சொத்து முழுவதும் கிரையத்தின் அடிப்படையில் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்தை 2009ல் 2ம் பிரதிவாதி கிரையம் பெற்று இந்நாள்வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

4) தாவா 2வது அயிட்ட சொத்தில் கழிவறை, குளியலறை மற்றும் காம்ப்வுண்ட் சுவர் உள்ளது என்றால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்தில் 2ம் பிரதிவாதி கட்டிய கழிவறை, குளியலறை மற்றும் காம்ப்வுண்ட் சுவர் உள்ளது. நான் அனைத்து விவரமும் தெரிந்து கொண்டு கட்சிக்காக இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றாலும், தாவாவில் நாங்கள் கேட்கும் பரிகாரம் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றாலும் சரியல்ல.

ஒப்பம்/– திரு.S.கணேஷ், M.Com, M.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.